1973 பிப்ரவரி 6]

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : வினாக்கள் 23 முதல் 27 வரை ஒத்திவைக்கப்படுகின்றன.

Water Supply in Delta Area

* 36. THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to introduce the turn system for water supply in Delta area in the State this year; and

(b) if so, the details thereof?

கயவாய்ப் பகுதியில் பாசன நீர் வழங்குதல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் கயவாய்ப் பகுதியில் பாசனத்திற்கு நீர் வழங்க இந்த ஆண்டு முறை வைத்துப் பாசனம் பெறும் நடைமுறையைச் செயலுக்குக் கொண்டு வரும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Traffic Survey

* 37. Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the amount spent on the purchase of Scientific equipment for conducting traffic survey by the Highways Research Station, Madras, during the last five years; and

(b) whether they are being utilised?